வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 05.03.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பின்லாந்து அதிபரை சந்தித்து பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

இந்தியாவில், 29 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு, வங்கிக் கணக்கு வழங்கப்பட்டு இருப்பதை, ஐநா மகளிர் அமைப்பு பாராட்டி உள்ளது.

இந்தியா உலக அளவில், திறன்மிகு இளைஞர்களின் தலைநகரமாக மேம்பட்டு வருவதாக, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சவுத்ரி கூறியுள்ளார்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி திருவிழாவை ஒட்டி, தெற்கு ரயில்வே, நாளையும், நாளை மறுநாளும், விழுப்புரத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் இடையே, சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.

---------------------

*மோடி-பின்லாந்து 1 (6)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பின்லாந்து அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டப்-பை சந்தித்து பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பாக, உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன. சுற்றுச்சூழல், புலப்பெயர்வு, புள்ளியியல் உள்ளிட்ட துறைகள் இதில் அடங்கும். பிரதமர் -பின்லாந்து அதிபர் சந்திப்பு குறித்து கூடுதல் விவரங்கள்......

(வாய்ஸ்)

*மோடி-பின்லாந்து 2 (16)*

(வாய்ஸ்)

உலகில் பிணக்குகள் அதிகரித்து வரும் நிலையில், இந்தியா-ஐரோப்பா உறவுகள் வலுப்படுவதால், உலக அளவில், ஸ்திரத் தன்மையும், வளர்ச்சியும் அதிகரிக்கும் என்று, பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருதலைவர்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். உக்ரைன் முதல், மேற்காசியா வரை பல்வேறு பகுதிகளில் நிலவும் பிணக்குகளை விரைவில் தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும், இந்தியாவும், பின்லாந்தும் தொடர்ந்து ஆதரிக்கும் என்று அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில், அண்மையில் எட்டப்பட்ட வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், இந்தியாவிற்கும், பின்லாந்திற்கும் இடையே, வர்த்தகம், முதலீடு, மற்றும், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் தெரிவித்தார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும், உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாகவும் திகழக் கூடிய இந்தியாவுடன், ஐரோப்பிய ஒன்றியம் எட்டியுள்ள உடன்பாடு, மிக முக்கியமானது என்று, பின்லாந்து அதிபர் திரு. அலெக்சாண்டர் ஸ்டப் கூறினார்.

---------------------

*மோடி-பின்லாந்து 3 (11)*

4 நாள் இந்தியப் பயணமாக நேற்று புதுடெல்லி வந்து சேர்ந்த பின்லாந்து அதிபர், இன்று மாலை தலைநகரில், 11ஆவது ரெய்சினா பேச்சு வார்த்தை மாநாட்டில், தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார். குடியரசுத் தலைவர், மற்றும் துணைத் தலைவரையும் அவர் சந்திக்கிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைக்கும் ரெய்சினா பேச்சு வார்த்தை மாநாட்டில், 110 நாடுகளில் இருந்து, சுமார் 2 ஆயிரத்து 700 பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். அமைச்சர்கள், அரசுத் தலைவர்கள்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராணுவ தலைவர்கள், மற்றும், முக்கிய தொழில் அதிபர்கள் இதில் அடங்குவர். உலகின் முக்கிய புவி-அரசியல், மற்றும், பொருளாதார பிரச்சனைகளை விவாதிப்பதற்கான இந்த வருடாந்திர மாநாடு, 3 நாட்களுக்கு நடைபெறும்.

---------------------

*ராதாகிருஷ்ணன்* (13)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று கர்நாடக மாநிலம், சிக்கோடி தாலுக்கா, யடூர் கிராமத்தில் உள்ள வீரபத்ரர் கோவிலில், புதுப்பிக்கப்பட்ட ராஜகோபுரத்தை திறந்து வைத்து, மஹா கும்பாபிஷேகத்திலும் கலந்து கொண்டார். இந்தியா என்பது, சிந்து சமவெளி முதல், கன்னியாகுமரி வரை, பாய்ந்து பரவியுள்ள, வாழும் நாகரீகமே தவிர, வெறும் நாடு அல்ல என்று, அவர் தமது உரையில் கூறினார். இந்தியா உலகிற்கு வழங்கிய வேதங்களே இன்று வரை தர்மத்தின் பாதையில் மனிதகுலத்திற்கு வழிகாட்டி வருவதாக அவர் தெரிவித்தார். உலகமே ஒரு குடும்பம் என்பதே காலத்தை வென்ற இந்தியாவின் தத்துவம் என்றும், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தெய்வீகத்தை காண்பதே, இந்தியாவின் ஆன்மீகப் பார்வை என்றும் அவர்குறிப்பிட்டார். கர்நாடக ஆளுநர் திரு. தாவர்சந்த கெலாட் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

---------------------

*ஈரான்* (11)

ஈரானில், அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டுத் தாக்குதில் கொல்லப்பட்ட உச்ச நிலைத் தலைவர் அயதுல்லா சையது அலி கமேனியின் உடலை, பொது மக்களின் அஞ்சலிக்காக, டெஹ்ரானில் உள்ள கிரான்ட் மொசல்லா பிரார்த்தனை வளாகத்தில் வைக்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 3 நாள் பிரியா விடை நிகழ்வுகள், நேற்றே தொடங்குவதாக இருந்த போதிலும், ஈரானியப் படைகளுக்கும், அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டுப் படைகளுக்கும் இடையே சண்டை நீடிப்பதால் ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையே, வெளியுறவுச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி இன்று புதுடெல்லியில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு நேரில் சென்று, அயதுல்லா சையது அலி கமேனி மறைவு தொடர்பான இரங்கல் புத்தகத்தில் அரசு சார்பில் கையெழுத்திட்டார்.

---------------------

*இந்தியா மகளிர்* (9)

இந்தியாவில், 29 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு, வங்கிக் கணக்கு வழங்கப்பட்டு இருப்பதை, ஐநா மகளிர் அமைப்பின் கொள்கைத் துறை இயக்குநர் திருமதி சான்ட்ரா ஹென்ரிக்ஸ் பாராட்டி உள்ளார். 12 ஆண்டுகளாக இந்தியாவில் அமலாகி வரும் பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ், இதுவரை தொடக்கப் பட்டுள்ள வங்கிக் கணக்குகளில் 56 சதவகிதம் பெண்களுக்கு உரியவை என்பதையும் அவர் பாராட்டியுள்ளார். பெண்கள் உட்பட அனைவரையும், முறையான நிதிக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதில், இந்தியாவின் டிஜிட்டல் முன் முயற்சிகள், மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாகவே திகழ்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

---------------------

*மை பாரத் பதிவு* (12)

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, இளைஞர்கள் புதிய யோசனைகளை வழங்க ஏதுவாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, மை பாரத்-பட்ஜெட் குவெஸ்ட் போட்டியின் 2ஆம் நிலைக்கு, இதுவரை, சுமார் 47 ஆயிரம் கட்டுரைகள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோர், வரும் 15ஆம் தேதி முதல், தங்களின் யோசனைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் எடுத்துக் கூற நேரடி வாய்ப்பு பெறுவார்கள் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. பாரத்-குவெஸ்ட் போட்டிகளின் முதல் கட்டத்தில், நாடெங்கிலும் இருந்து சுமார் 12 லட்சம் இளைஞர்கள், வினாடி-வினா போட்டிகளில் கலந்து கொண்டதும், இதில் உத்தரபிரதேஷ், தமிழ்நாடு,

மற்றும் மேற்குவங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

திறன் மேம்பாடு (8)

இளைஞர்களுக்கான அரசின் பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களால், இந்தியா உலக அளவில், திறன்மிகு இளைஞர்களின் தலைநகரமாகவே மேம்பட்டு வருவதாக, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சவுத்ரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பின்லாந்து நாட்டின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரை அவர் சந்தித்து பேசுகையில், இந்தியாவின் மக்கள் தொகையில் இளைஞர்கள் அதிகம் இருப்பதும், தொழில்நுட்பத்தில் பின்லாந்தின் திறமைகளும் இணைந்து, புதிய சாதனைகளை படைக்க முடியும் என்றார்.

---------------------

*மாண்டவியா* 1 (5)

வரும் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில், ஜப்பானில் நடைபெற உள்ள, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான இந்தியாவின் முன்னேற்பாடுகள் குறித்து, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இன்று புதுடெல்லியில், உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*மாண்டவியா* 2 (10)

(வாய்ஸ்)

இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவில் இருந்து 700க்கும் மேற்பட்ட வீரர்-வீராங்கனைகள், 40க்கும் மேற்பட்ட விளையாட்டுப் பிரிவுகளில் கலந்து கொள்ள இருப்பதாக அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். இவர்கள் அனைவரும் சிறந்த

முறையில் வெற்றி பெற, பயிற்சி, உணவு, மருந்து, உபகரணங்கள் உட்பட, எல்லா உதவிகளையும் அரசு வழங்கி வருவதாக அவர் கூறினார். விளையாட்டுத் துறையில் இந்தியா புதிய மைல்கற்களை எட்ட, சரியான திட்டமிடலும், வலுவான ஆதரவுக் கட்டமைப்பும் அவசியம் என்பதால், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும், இதில் ஒருங்கிணைந்து செயல்படுதல் முக்கியம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

----------------------

*சிறப்பு ரயில்* (13)

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி திருவிழாவை ஒட்டி, தெற்கு ரயில்வே, விழுப்புரத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் இடையே, சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது. இதன்படி நாளையும், நாளை மறுநாளும், 8 பெட்டிகளை கொண்ட, முன்பதிவு இல்லாத மெமு சிறப்பு ரயில், காலை 9.10க்கு விழுப்புரத்தில் இருந்து புறப்பட்டு, பிற்பகல் 13.05க்கு நாகப்பட்டினம் சென்றடையும். மறுமார்க்கத்தில் இந்த ரயில், பிற்பகல் 13.20க்கு நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு, மாலை 5.30க்கு விழுப்புரம் வந்தடையும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரி-விழுப்புரம் மெமு ரயிலின் நீட்டிப்பாக அறிவிக்கப் பட்டுள்ள இந்த சிறப்பு ரயில், இரு மார்க்கங்களிலும், பண்ருட்டி, கடலூர், சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோவில், மயிலாடுதுறை, பேரளம், காரைக்கால், நாகூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும். பயணிகள், புதுச்சேரியில் இருநது நாகப்பட்டினத்திற்கு நேரடியாக டிக்கெட் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

----------------------

*ஜெயகுமார்* (10)

புதுச்சேரியில், மங்கலம் தொகுதிக்கு உட்பட்ட குபேரன் நகர், அருண் நகர், வெங்கடேஸ்வரா நகர், மகாலட்சுமி நகர், தமிழ் செங்கோலன் நகர் உள்ளிட்ட பகுதிகளில், உட்புற சாலைகளில், மொத்தம் சுமார் 175 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பொதுப் பணித் துறை மூலம் மெற்கொள்ளப்பட உள்ள மேம்பாட்டுப் பணிகளை, மாநில வேளாண் அமைச்சர் திரு.

ஜெயகுமார் இன்று, பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பங்கூர் கிராமத்தில், ப - வடிவ வாய்க்கால் மறு கட்டுமானப் பணிகளையும், வரதராஜபெருமாள் நகர் அருகே, யு-வடிவ குறுக்குப் பாலம் அமைக்கும் பணிகளையும், அமைச்சர் தொடக்கி வைத்தார். பொதுப் பணித் துறை தலைமை பொறியாளர் திரு. வீர செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---------------------

வானிலை (10)

இன்று தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்றாலும், நாளை கோவை, நீலகிரி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 9-10 ஆகிய தேதிகளில், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழை எதிர்பார்க்கப் படுகிறது. நாளையும், நாளை மறுநாளும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில், அதிகாலை வேளையில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானலில் 8.1 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------

கிரிக்கெட் (11)

உலகக் கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று மும்பையில் நடைபெறும் 2ஆவது அரையிறுதிப் போட்டியில், இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோத உள்ளன. உலகக் கோப்பை 20 ஓவர் அரையிறுதிப் போட்டியில், இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதுவது இது 3ஆவது முறையாகும். 2022ஆம் ஆண்டில், இங்கிலாந்து அரையிறுதிப் போட்டியிலும், பின்னர் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்றது. 2024ஆம் ஆண்டில், இந்தியா அரையிறுதிப் போட்டியிலும், பின்னர் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்றது. இன்றைய அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, வரும்

ஞாயிற்றுக்கிழமை அகமதாபாத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில், நியூசிலாந்து அணியுடன் மோதும்.

----------------------

*நிதிஷ் குமார்* (11)

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவருமான திரு. நிதிஷ் குமார், மாநிலங்களவைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இன்று பட்னாவில், பீகார் சட்டப் பேரவைச் செயலரிடம், அவர் தமது வேட்பு மனுவை தாக்கல் செய்த போது, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பீகார் மக்கள் உடனான தமது பிணைப்புகள் தொடரும் என்று, முன்னதாக, சமூக பதிவு ஒன்றில் அவர் தெரிவித்தார். இதற்கிடையே, 2025ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், பீகார் மக்கள், திரு. நிதிஷ் குமாருக்குதான் வாக்களித்ததால், அவர் டெல்லிக்கு மாறக்கூடாது என வலியுறுத்தி, ஜேடியு தொண்டர்கள் சிலர், இன்று பட்னாவில், திரு. நிதிஷ் குமார் இல்லம் முன்பாக ஆர்பாட்டம் மேற்கொண்டனர்.

----------------------

*டிஜிட்டல்* (14)

டிஜிட்டல் வசதிகள், உலகில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், டிஜிட்டல் உபகரணங்களை மலிவான விலையில் கிடைக்கச் செய்தல் அவசியம் என்று, இந்தியா வலியுறுத்தி உள்ளது. மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா, ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில், உலக மொபைல் காங்கிரஸ் மாநாட்டில் பேசுகையில் இவ்வாறு வலியுறுத்தினார். இந்தியாவில் மொபைல் ஃபோன்களின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, டேட்டா கட்டணங்களும் 97 சதவிகதம் குறைக்கப் பட்டுள்ளதையும், இத்தகைய ஆதரவு இல்லாமல், உலகில் சுமார் 310 கோடி பேர், டிஜிட்டல் வசதிகளில் இருந்து, விலகியே நிற்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். 5ஜி தொலை தொடர்பு வசதிகள், 6ஜி நிலைக்கு உயரும் போது, அதன் பலன்கள்

அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், அரசு, தொழில் துறையினர், நிதி அமைப்புகள் உட்பட, அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, திரு. சிந்தியா மேலும் கேட்டுக் கொண்டார்.

----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பின்லாந்து அதிபரை சந்தித்து பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

இந்தியாவில், 29 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு, வங்கிக் கணக்கு வழங்கப்பட்டு இருப்பதை, ஐநா மகளிர் அமைப்பு பாராட்டி உள்ளது.

இந்தியா உலக அளவில், திறன்மிகு இளைஞர்களின் தலைநகரமாக மேம்பட்டு வருவதாக, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சவுத்ரி கூறியுள்ளார்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி திருவிழாவை ஒட்டி, தெற்கு ரயில்வே, நாளையும், நாளை மறுநாளும், விழுப்புரத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் இடையே, சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.